செ.வெ.எண் : 839 நாள்: 13.11.2009

பத்திரிக்கை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் கேரள மாநிலத்திலுள்ள தங்குதளங்களிலிருந்து ஆழ்கடல் மீன்பிடிப்பு மேற்கொள்ளவேண்டி கடலுக்குச் செல்வது வழக்கமான நிகழ்வு ஆகும். அதே போல், 1/11/2009 தேதி முதல் வெவ்வேறு நாட்களில் 150 விசைப்படகுகள் (செவுள் வலை மற்றும் தூண்டில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் படகுகள்) கேரள மாநிலத்திலுள்ள கொச்சி மற்றும் ஆழிக்கால் தங்கு தளங்களிலிருந்து மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். இப்படகுகள் வடக்கு கேரளா முதல் குஜராத் வரையுள்ள கடற் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது 10/11/2009 நண்பகல் முதல் வீசிய "பையான்" என்ற கடும் புயலால் பாதிக்கப்பட்டனர். இப்புயலினால் பாதிப்படைந்த படகுகள் மற்றும் மீனவர்களை மீட்க, உடனடியாக கடலோர காவற்படை மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று (13/11/2009 அன்று) கன்னியாகுமரி ஆழ்கடல் மீன்பிடிப்பு சங்கம் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தூத்துக்குடி மண்டல மீன்துறை இணை இயக்குநரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், 7 படகுகள் கடலில் மூழ்கியதாகவும், 8 மீனவர்கள் காணாமல் போனதாகவும் அறியப்படுள்ளது.

மூழ்கிய 7 படகுகளில், ஒரு படகில் சென்ற காயமுற்ற நிலையிலிருந்த மூன்று மீனவர்கள் கோவா கடற்கரை பகுதியிலுள்ள மீனவர்களால் காப்பாற்றப்பட்டு கோவாவிலுள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருவதாக தகவல் பெறப்பட்டது. கோவா மற்றும் கர்நாடக மாநில மீன்துறை உயர் அதிகாரிகளுடன் மீன்துறை ஆணையர் தொடர்பு கொண்டு, படகு உரிமையாளருக்கும் தகவல் தெரிவித்து, அம் மீனவர்களுக்கு மருத்துவ மனையில் தரமான சிகிச்சை அளித்திட மேற்கொண்ட முயற்சியினால் மூன்று மீனவர்களும் சிகிச்சை பெற்று திரும்ப அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த 7 படகுகளைத் தவிர மூழ்கிய இதர மூன்று படகுகள் மீட்கப்பட்டு, கரைக்கு இழுத்து வரப்பட்டு, கொச்சின் மற்றும் கார்வார் கடற்கரை பகுதியில் உள்ளதாகவும் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

மற்ற படகுகள் ஒன்றன்பின் ஒன்றாக கோவா மற்றும் மகாராஷ்டிரா கடற்கரை பகுதிகளுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றன. காணாமல் போன மீனவர்கள் மற்றும் படகுகளை தேடிக்கண்டுபிடித்திட தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டுள்ளது. இதனால் எவரும் பீதியடையத் தேவையில்லை.

மீன்துறை ஆணையர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9